பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

31 03 2025 **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசின் இலவச உணவு தானியம் திட்டம் மூலம், 81 கோடி பேர் பயனடைந்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

**2.** வக்ஃப் மசோதா தொடர்பான தவறான தகவல்களை யாரும் பரப்ப வேண்டாம் என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மியான்மர் நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், இன்று தொடங்கி, ஒருவார காலத்திற்கு துக்கம் அனுசரிக்கப்படும் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

4. நாட்டில் கோடை வெயிலின் தாக்கம் ஏப்ரல் மாதம் முதல், ஜூன் மாதம் வரை வழக்கத்தைவிட அதிகரித்தே காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

**5.** டென்னிஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யுகி பாம்ரி 26-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள் --

<<<<<<<>>>>>

மத்திய அரசின் இலவச உணவு தானியம் திட்டம் மூலம், 81 கோடி பேர் பயனடைந்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம் ஹிசாரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பிரதமரின் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், நான்கு கோடி வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் 20 கோடி பேர் பயனடைந்துள்ளதாகவும் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, 2014-ஆம் ஆண்டு பதவியேற்றபோது, நாட்டில் ஆறு எயிம்ஸ் மருத்துவக்கல்லூரிகள் இருந்ததாகவும், தற்போது அந்த எண்ணிக்கை 23-ஆக உயர்ந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள மருத்துவக்கல்லூரிகளின் எண்ணிக்கை 387-ல் இருந்து, 766-ஆக உயர்ந்திருப்பதாக கூறினார்.

இளங்கலை மருத்துவப்படிப்புக்கான இடங்கள் 51 ஆயிரத்திலிருந்து தற்போது ஒரு லட்சத்து 15 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த ஐந்தாண்டுகளில் மேலும் 85 ஆயிரம் இடங்கள் சேர்க்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் மருத்துவ கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டிருப்பதாக திரு அமித் ஷா பெருமிதம் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

வக்ஃப் மசோதா தொடர்பான தவறான தகவல்களை யாரும் பரப்ப வேண்டாம் என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சில அரசியல் கட்சிகளும், அமைப்புக்களும் இத்தகைய செயல்களில் ஈடுபடுவதாக குறை கூறினார்.

இந்த மசோதா குறித்து ஆக்கப்பூர்வமான விவாதங்களை நாடாளுமன்றத்தில் நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>

உயிரி தொழில்நுட்ப துறைக்கு மத்திய அரசு முன்னுரிமை தந்து வருவதாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஆந்திரப்பிரதேசத்தில் உயிரி தொழில்நுட்பத்துறையில் நவீன தொழில்நுட்பங்களை மத்திய அரசுடன் இணைந்து செயல்படுத்துவது குறித்து அம்மாநில சுகாதார அமைச்சர் திரு சத்தியகுமார் இன்று புதுதில்லியில் அவரை பேசினார்.

இந்த சந்திப்பின்போது, ஆந்திரப்பிரதேசத்திற்கு மத்திய அரசு முழு ஒத்துழைப்பை வழங்கும் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

கடந்த சில ஆண்டுகளில் நாட்டின் உயிரி தொழில்நுட்பத்துறையில் அம்மாநிலம் சிறப்பாக விளங்கி வருவதாகவும், உயிரி மருந்துகள் ஆய்வு, கடல்சார் மற்றும் வேளாண்மை சார்ந்த உயிரி தொழில்நுட்ப தீர்வுகளில் சிறப்புடன் செயல்பட்டு வருவதாகவும் அவர் பாராட்டு தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 10 ஆயிரம் புத்தொழில் நிறுவனங்கள் உயிரி தொழில்நுட்பத்துறையில் செயல்பட்டு வருவதாகவும், அவற்றில் 70 சதவீத நிறுவனங்கள் மருத்துவம் சார்ந்து இயங்கி வருவதாகவும் திரு ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>

தில்லி காற்றுமாசு தொடர்பான கணக்கு தணிக்கைத்துறையின் அறிக்கையை முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா நாளை தில்லி சட்டப்பேரவையில் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தில்லியில் காற்று மாசை கட்டுப்படுத்தும் வகையில், முந்தைய ஆம் ஆத்மி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து சட்டப்பேரவையில் நாளை விவாதிக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

தில்லியில் பிஜேபி அரசு பதவியேற்ற பின்னர், சுகாதாரத்துறை, தில்லி போக்குவரத்துக்கழகம் தொடர்பான கணக்கு தணிக்கைத்துறையின் இரண்டு அறிக்கைகள் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

<<<<<<<>>>>>

புற்றுநோய் பாதிப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், புற்றுநோய் பாதிப்புகளை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் நோக்கில் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், மார்பக புற்றுநோயை கண்டறிவதற்கான பரிசோதனைகள் 15 கோடிக்கும் மேற்பட்டோருக்கு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறினார்.

<<<<<<<>>>>>

கிரீஸில் இந்தியா, அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கும் பன்னாட்டு விமானப்படை பயிற்சி இன்று தொடங்கியது.

அந்நாட்டின் **Elis** நகரில் 12 நாட்கள் நடைபெறும் இப்பயிற்சியானது அடுத்த மாதம் 11-ஆம்தேதி நிறைவடைகிறது.

விமானப்படை தொடர்பான நவீன தொழில்நுட்பங்களை பகிர்ந்துகொள்ளும் விதமாகவும், சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையிலும் இப்பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

<<<<<<<>>>>>

மியான்மர் நாட்டில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில், இன்று முதல் ஒருவார காலம் துக்கம் அனுசரிக்கப்படும் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்நாட்டு நிர்வாக கவுன்சில் தலைவர் திரு **Min Aung Haing** வெளியிட்டுள்ள அறிக்கையில், இதன் ஒரு பகுதியாக, நாடு முழுவதும் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கும் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று மியான்மரில் ஏழு புள்ளி ஏழு ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டு இதுவரை 2 ஆயிரத்து 56 பேர் உயிரிழந்துள்ளனர். 3 ஆயிரத்து 400 பேர் காயமடைந்துள்ளனர். 300 பேர் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து 36 முறை நிலஅதிர்வு ஏற்பட்டுள்ளதாகவும் இன்று காலை வரை அது உணரப்பட்டதாகவும் அந்நாட்டு வானிலையியல் துறை தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மருக்கு நிவாரண உதவிகள் அளிக்கும் வகையில் ஆபரேஷன் பிரம்மாவை இந்தியா செயல்படுத்தி வருகிறது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு, தற்காலிக தங்குமிடங்கள், மருந்துகள் வழங்கும் நடவடிக்கைகளில் இந்திய பேரிடர் மீட்புப்படையினர்

ஈடுபட்டு வருகின்றனர்.

<<<<<<<>>>>>

பாலஸ்தீனத்தின் **Rafah** நகரில் வசிக்கும் மக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது. இதுதொடர்பாக, இஸ்ரேல் ராணுவம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், அந்நகரில் தரைவழி தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>

மத்திய தொழில் பாதுகாப்புப்படை சார்பில் மேற்கொள்ளப்பட்ட வளமான இந்தியா – பாதுகாப்பான இந்தியா என்ற கடலோர சைக்கிள் பேரணி தமிழகத்தின் கன்னியாகுமரியில் இன்று நிறைவடைந்தது.

கடந்த 7-ஆம் தேதியன்று மேற்குவங்க மாநிலம் பக்காலியில் தொடங்கிய இப்பேரணியில் எட்டு பெண்கள் உட்பட 57 பேர் பங்கேற்றனர்.

இந்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணி, 6 ஆயிரத்து 559 கிலோமீட்டர் தூரம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

பிஜுயில் நடப்பாண்டில் இதுவரை 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு டெங்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொள்ளாயிரத்து 50-க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் 3 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பிஜு சுகாதாரத்துறை கூறியுள்ளது.

<<<<<<<>>>>>

மிசோரத்தில் ஒருவருட காலத்திற்கான தூய்மை பணிகள் இயக்கம் இன்று தொடங்கியது. இதனை தொடங்கிவைத்து பேசிய அம்மாநில அமைச்சர் திரு **'Sapdanga '**மாநிலத்தில் தூய்மையை பராமரிக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த இயக்கம் நடத்தப்படுவதாக தெரிவித்தார்.
நகரங்கள் தொடங்கி, கிராமங்கள் வரை அனைத்துப்பகுதிகளிலும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

தூய்மைப்பணிகளை கண்காணிப்பதற்கென குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<<>>>>>

பாஸ்போர்ட் தொடர்பான சந்தேகங்களை களையும் வகையில் சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலர் திரு விஜயகுமாருடன், எமது செய்திப்பிரிவு உதவி இயக்குனர் ஜாய் பங்கேற்ற நேர்முகம், நாளை காலை மணி 8.45-க்கு ஒருங்கிணைந்த அலைவரிசையில் ஒலிபரப்பாகும்.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<<>>>>>

நாட்டில் கோடை வெயிலின் தாக்கம் ஜுன் மாதம் வரை வழக்கத்தைவிட அதிகரித்தே காணப்படும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தலைவர் திரு **Mrutyunjay Mohapatra** கூறியுள்ளார்.

இணையதளம் வாயிலாக செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தமிழ்நாடு, கர்நாடகா, ராஜஸ்தான, குஜராத், ஹரியானா, பஞ்சாப் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் அனல் காற்று வீச வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

டென்னிஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யுகி பாம்ரி 26-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

-----------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் மும்பை - கொல்கத்தா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

மும்பையில் நடைபெறும் இப்போட்டியில் டாஸ் வென்ற மும்பை அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

--------------------

ஆசிய கோப்பை ஹாக்கிப்போட்டி பீகாரின் **Rajgir** –ல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இப்போட்டி, ஆகஸ்ட் மாதம் 29–ஆம் தேதி தொடங்கி, செப்டம்பர் மாதம் 7–ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

----------

**Morocco**–வில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சுமித் நாகல் இரண்டாவது தகுதி சுற்று ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.
முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் அவர், 6–2, 6–2 என்ற செட் கணக்கில், **Morocco**-வின் **Amine Jamji-**ஐ வென்றார்.

**<<<<<<<END>>>>>**